පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF PERADENIYA

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - 2015 අගෝස්තු
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - 2015 ஆகஸ்ட்
GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) – AUGUST 2015

மெய்யியல்

பொது உளவியல் (PHG 1)

இவ்வினாத்தாளில் எல்லாமாக பத்து ( 10) வினாக்கள் காணப்படுகின்றன. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
நேரம் - மூன்று மணித்தியாலம்.

---

01. அனுபவ உளவியலின் விடயப் பொருளை எடுத்துக் கூறி ஆராய்க.

02. “கெஸ்ரோல்ட் உளவியல் அதிகமாக கற்றல் மற்றும் புலன்காட்சி பற்றிய ஆய்வுக்குப் பங்களித்துள்ளது. அது பிரச்சினை தீர்த்தலில் நுண்ணறிவின் வகிபாகத்தை வலியுறுத்துகின்றது.” கருத்துரைக்குக.

03. ஆளுமை என்றால் என்ன?. ஆளுமை பற்றி உள்ள உளவியல் கருத்துக்களை நாம் எவ்வாறு விமர்சனத்திற்குட்படுத்தலாம்.

04. **ஒன்றில்**

சிக்மண்ட் புரொய்ட் உளவியல் துறைக்கு ஆற்றிய பங்களிப்பின் இயல்பையும் பெறுமானத்தையும் பற்றிய உமது அவதானங்களைக் கூறுக.

**அல்லது**

ஜாக்ஸ் லாக்கானால் அவரது “மீண்டும் புரொய்டிற்குத் திரும்புதல் இயக்கத்தில்” அறிமுகப்படுத்தப்பட்ட மையக் கருப் பொருட்களை ஆராய்க.

05. பின்வரும் உளவியலாளர்களுள் எவரேனும் **இருவரின்** பங்களிப்புக்களை மதிப்பிடுக.

I. எட்வோட் தோண்டைக்
II. வில்ஹெல்ம் வூண்ட்
III. பி.எவ். ஸ்கின்னர்.
IV. காள் யூங்

06. ஜீன் பியாஜேயின் அறிவுசார் விருத்திக் கொள்கையின் மையக் கருத்துக்களை எடுத்துக்கூறி சுருக்கமாக ஆராய்க.

07. I. “ஊக்கி” மற்றும் “உந்து” என்ற பதங்களை தெளிவுப்படுத்துக.

II. ஆபிரகாம் மாஸ்லோவின் இயல்பூக்கக் கொள்கையின் மாதிரியை நுணுகி மதிப்பிடுக.

08. I. நுண்ணறிவு என்றால் என்ன?

II. " நுண்ணறிவு ஈவு (I.Q) என்பது ஒருவருடைய மனத்திறனின் ஒரு அடைவாகும்." இக்கூற்றை மதிப்பிடுக.

III. நுண்ணறிவு வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?

09. I. ஞாபகத்தை வரையறுக்குக.

II. குறுங்கால ஞாபகத்தை நீண்டகால ஞாபகத்திலிருந்து வேறுபடுத்துக.

III. ஞாபகத்தை மேம்படுத்தலாமா?

10. ஏதேனும் இரண்டினைப் பற்றி கருத்துரைக்குக.

I. அமைப்பியல் வாதத்தின் முக்கியத்துவம்

II. அனுபவ உளவியலின் முறைகள்

III. உளவியலும் விஞ்ஞானமும்

IV. குற்றவியல் உளநிலை

V. மனிதப் பண்புகளின் வளர்ச்சியில் ஒழுக்கங்களின் பங்கு

---------------------------